Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 39/2015

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No. 3**

| | | | |
|---|---|---|---|
| Name : | NATARAJAN | Calling: | - |
| Father's Name: | CHIDAMBARAM | Religion: | HINDU |
| Village: | VANIYAMBADI | Age: | 87 |
| Taluk: | VANIYAMBADI | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.11.2019

SIGN :

CC 39/2015 அ.சா.3 நடராஜன் த/பெ.சிதம்பரம் வயது 87

<u>**முதல் விசாரணை :**</u>

நாள் : 25.11.19
நேரம் : 3.17 PM

நான் தற்பொழுது வாணியம்பாடியில் வசித்து எந்த வேலையும் செய்யாமல் வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 அண்ணாமலை, சாட்சி மணி ஆகியோரை தெரியும். மேற்படி சாட்சிகள் லாரி உரிமையாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். 1987ம் வருடத்திலிருந்து வாணியம்பாடி லாரி உரிமையாளர் சங்கம் தனியாகவும், பெட்ரோல் பங்க் தனியாகவும் நாங்கள் நடத்தி வருகிறோம். கடந்த 2010ம் வருடம் 10வது மாதம் தேதி தற்பொழுது ஞாபகமில்லை. செயற்குழு உறுப்பினர்கள் 18 பேர்களை கூடுதலாக உறுப்பினர்களாக எதிரிகள் சேர்த்துவிட்டனர். வழக்கமாக மாதத்திற்கு ஒரு முறை சங்கத்தின் சார்பாக பொதுக் குழு கூட்டம் நடைபெறும். அன்றைய தினம் மேற்படி எதிரிகள் உட்பட 18 பேர் இன்னும் அதிகமாக கடன் வாங்கி பெட்ரோல் பங்க் மற்றும் சங்கத்தை அபிவிருத்தி செய்வதாக சொன்னார்கள். நானும் சாட்சியும் ஏற்கனவே சங்கம் கடனில் தான் சென்று கொண்டிருக்கிறது. மேற்படி கடன் கொடுக்க வேண்டாம் என தெரிவித்தோம். ஆனால் எதிரிகள் அவர்களாகவே தீர்மானம் போட்டு சுந்தரமூர்த்தி, ஈஸ்வரன், திருவேங்கடம், அண்ணாமலை

ஆகியோர் ஊசி தெருவில் H.B.கல்யாண மண்டபத்தில் சரவணன், ஏகாம்பரம் அங்கு சுந்தரமூர்த்தி, ஏகாம்பரம் வரவில்லை, ஆனால் சுந்தரமூர்த்தி 4 லட்சம் கடன் வாங்கியவர் தான். பொதுக் குழு நடந்து கொண்டிருந்த சமயத்தில் எதிரி ரஜினிகாந்த் அவராகவே எழுதி கையெழுத்து போட சொன்னார், போட்டேன். எதிரி ஏகாம்பரம் சங்கத்திற்கு சொந்தமான பெட்ரோல் பங்கிற்கு சென்று அதை கையகப்படுத்தி கொண்டார்கள். அங்கிருந்த ஊழியர்களை அனுப்பிவிட்டார்கள். இது சம்மந்தமாக வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். நடவடிக்கை எடுக்கவில்லை. பின்னர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய உத்தரவு பெற்று வந்தோம். மேற்படி லாரி உரிமையாளர் சங்கத்தின் ஏற்கனவே நஷ்டத்தில் இயங்கியதால் பொதுக்குழு கூடும் வரை அண்ணாமலை, ராமகிருஷ்ணனுக்கு ஒப்பந்தமாக

விட்டிருந்தோம். ஏற்கனவே பெட்ரோல் பங்க் நஷ்டத்தில் இயங்கி வந்ததால் அண்ணாமலையிடம் 3 லட்சமும், ராமகிருஷ்ணனிடம் 5 லட்சமும், நான் 4 லட்சமும் கொடுத்திருந்தோம். ஆனால் எதிரிகள் மேற்படி பணத்தை கொடுக்கவில்லை, அதற்கான கணக்கையும் காட்டவில்லை. மேற்படி அன்றைய தினம் பொதுக்குழுவில் சுந்தரமூர்த்தி, ஈஸ்வரன் மற்றும் அடையாளம் தெரியாத நபர்கள் விரட்டியடித்து விட்டனர். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி 1, 2 , 4 முதல் 6 எதிரிகள் வரை குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது. எனவே 1,2, 4 முதல் 6 வரையுள்ள எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்பதால் முடிக்கப்படுகிறது. 3வது எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. அவருடைய வழக்கறிஞர் ஆஜர்.

<u>**3வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u> 6.33 PM

2010ம் ஆண்டு வரை லாரி உரிமையாளர் சங்கத்தின் தலைவராக நான் இருந்தேன் என்றால் சரிதான். லாரி உரிமையாளர் சங்கத்திற்கு கடன் வாங்குவதோ, கொடுப்பதாகவோ இருந்தால் தீர்மானம் போட்டு தான் செய்யப்படும் என்றால் சரிதான். அண்ணாமலைக்கு 3 லட்சமும், ராமகிருஷ்ணனிடம் 5 லட்சமும், நான் 4 லட்சமும் கொடுத்திப்பதாக லாரி உரிமையாளர் சங்கத்திற்காக தீர்மானம் போடப்பட்டதா என்றால் இல்லை. லாரி உரிமையாளர் சங்கம் பதிவு பெற்ற சங்கம் என்றால் சரிதான். அந்த பதிவு விதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் வருமானம் தணிக்கைக்கு அனுப்புவது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு நான் கடன் கொடுத்திருந்தால் அந்த விவரம் சங்கத்தின் தணிக்கை அறிக்கையில் வந்திருக்கும் என்றால் சங்கத்தில் இரண்டு கணக்குகள் பராமரிக்கப்படுகிறது. தணிக்கைக்கான கணக்கில் கடன் கொடுக்கல், வாங்கல் தெரிவிக்கப்படமாட்டாது. அப்படியென்றால் அந்த கணக்கு தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அது சங்கத்திற்காக வாங்கப்பட்ட கடன் ஆகும். சங்கத்திற்கு சொந்தமான பெட்ரோல் பங்கை குத்தகை விடுவதாக இருந்தால் சங்கத்தில் தீர்மானம் போட்டு தான் விடப்படும் என்றால் சரிதான். 5 லட்சம் வரை தீர்மானம் போடாமல் கடன் வாங்கலாம் என்று எங்கள் சங்கத்தில் உள்ளது. ரு.5 லட்சம் வரை தனிப்பட்ட வரை கடன் வாங்கலாம் என்ற விவரத்தை போலிஸ் விசாரணையிலும், முதன்மை விசாரணையிலும் தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை, சங்கத்தில் உள்ள அனைவருக்கும் தெரியும். சங்கத்தில் உள்ள பணத்தை என்னுடைய தனிப்பட்ட செலவிற்காக செலவு செய்ததாக சங்கத்திலிருந்து என்னை நீக்கினார்களா என்றால் இல்லை. எனக்கு சசிகலா என்ற மகளும், சரண்யா என்ற பேத்தியும் உள்ளார்களா என்றால் இருக்கிறார்கள். அவர்கள் இருவரையும் வைத்து சங்கத்தின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

6.46 PM

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 39/2015

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No. 4**

| | | | |
|---|---|---|---|
| Name : | MANI | Calling: | |
| Father's Name: | RAMASAMY | Religion: | HINDU |
| Village: | THEKKUPATTU | Age: | 71 |
| Taluk: | VANIYAMBADI | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 25.11.2019

SIGN :

CC 39/2015 அ.சா.4 மணி த/பெ.ராமசாமி வயது 71

<u>முதல் விசாரணை :</u>

நாள் : 25.11.19
நேரம் : 3.34 PM

நான் தற்பொழுது தெக்குபட்டில் வசித்து எந்த வேலையும் செய்யாமல் வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 அண்ணாமலை, நடராஜன் ஆகியோரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். பிற எதிரிகளையும் தெரியும். கடந்த 22.10.10ம் தேதி 12 மணியிலிருந்து 3 மணிக்குள் ஊசி தெருவில் உள்ள கல்யாண மண்டபத்தில் வருடத்திற்கு ஒரு முறை நடக்கும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் பொதுக் குழு கூட்டம் நடைபெற்றது. சாட்சி நடராஜன் மேற்படி சங்கத்தின் தலைவர் ஆவார். செயலாளர் பாண்டியன் ஆவார். பொருளாளர் வேலு நாயுடு ஆவார். சங்கத்தின் கணக்கு வழக்குகளை தலைவர், செயலாளர் ஒப்படைக்கும் பொழுது சரவணன், ரஜினிகாந்த், சுந்தரமூர்த்தி, ஈஸ்வரன், இன்னும் 4 , 5 நபர்கள் கணக்கு வழக்குகளை ஒப்படைக்க வேண்டாம் என்று மேற்படி சங்கத்திற்கு சொந்தமாக உள்ள பெட்ரோல் பங்கை யாரை கேட்டு ஒப்பந்தத்திற்கு விட்டீர்கள் என்று மேற்படி நபர்கள் கேட்டனர். கூச்சல், குழப்பம் அதிகமாகவே ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவே நான் பாதியிலேயே எழுந்து வந்துவிட்டேன். அதன் பிறகு நான் வாணியம்பாடியில் உள்ள என் சொந்த வேலையை முடித்து கொண்டு பங்க் வழியாக செல்லும் பொழுது பங்கில் கூட்டம் அதிமாக இருந்ததால் நான் பார்க்க சென்றேன். சண்டை சம்மந்தமாக கண்ணாடிகள் உடைந்திருந்தது. அதை யார் செய்தார்கள் என்று நான் பார்க்கவில்லை, அப்பொழுது நானில்லை. அப்பொழுது அந்த பங்கில் மேற்படி அண்ணாமலை, ரத்தினம் மற்றும் மற்றொரு நபர் இருந்தார்கள். என்ன கூச்சல் என்று நான் அவர்களை கேட்டேன். மேற்படி சாட்சி அண்ணாமலை ஆகியோர் பங்கை உடைத்துவிட்டு அதில் இருந்த பணத்தை சுந்தரமூர்த்தி, விஜயகுமார், சரவணன் மற்றும் ஒரு நபர் சென்றுவிட்டதாக என்னிடம் தெரிவித்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

எதிரி 1, 2 , 4 முதல் 6 எதிரிகள் வரை குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது. எனவே 1,2, 4 முதல் 6 வரையுள்ள எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்பதால் முடிக்கப்படுகிறது. 3வது எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. அவருடைய வழக்கறிஞர் ஆஜர்.

நேரம் 6.45 என்பதால் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.